


ஸ்ரீ ஸாயிகானாமிருதா பிக்சர்ஸ்

புதுயுகம்



டைரக்ஷன்
கோபு & சுந்தர்

தயாரிப்பு
G. ராமனாதன்

BHAR
STU

ஸ்ரீ சாயி கானமிர்தா பிக்சர்ஸாரின்

புதுயுகம்

நடிகர்கள் :	நடிகைகள் :
S. A. நடராஜன்	M. S. திரௌபதி
நரசிம்ம பாரதி	கிருஷ்ணகுமாரி
S. V. சுப்பையா	M. சரோஜா
C. S. பாண்டியன்	விமலா
M. S. முத்துகிருஷ்ணன்	ராஜாமணி
சாய் ராம்	ரத்தினம்

பைரவன், C. V. V. பந்துலு, சாமிக்கண்ணு

மற்றும்

கோவிந்தன், கோபால், கிருஷ்ணராவ் முதலியோர்

கதை, வசனம் :	சங்கீதம்
கவி. கா. மு. ஷெரீப்	**ஜி. ராமநாதன்**
டைரக்ஷன்	ஸ்டுடியோ
கோபு—சுந்தர்	**சாமளா-வாஹினி**

தயாரிப்பு :

ஜி. ராமநாதன்

புதியுகம்

கதைச் சுருக்கம்

பேராசிரியர் ரகுநாத் ஒரு சமூக சீர்திருத்தவாதி. அவரது ஒரே அருமைத் தங்கை செல்லம் ஒரு பால்ய விதவை. தன் மாணாக்கர்களில் ஒருவனான சேகர் என்னும் இளைஞனுக்கு செல்லத்தை மறுவிவாகம் செய்து கொடுப்பதென்பது ரெகுநாத்தின் திட்டம். சேகரும் செல்லத்தை நேசிக்காமலில்லை. சந்தர்ப்பமும், சூழ்நிலையும் செல்லத்தை மதிமயங்கச்செய்து சேகரின் காதலுக்கு பலியாகி கற்பவதியும் ஆகிறாள். சேகரின் தொழில் முன்னேற்றத்திற்காக ரெகுநாத் சேகருக்கு தனது ஒரே வீட்டையும் அடகு வைத்துப் பணம் வாங்கிக் கொடுக்கிறார். சேகரும் ஒரு பணக்காரனாகிறான். பணம் வந்தாலே குணம் மாறிவிடும் அல்லவா? அதுபோல் சேகர் தனவந்தர் மகளான சித்ரா என்பவளை மணம் புரிய ஏற்பாடாகிறது. இதை அறிந்த செல்லம் திடுக்குற்று சேகரைத் தன்னை மணக்கும்படி வேண்டுகிறாள். அவன் மறுக்கிறான். தன்னை சேகர் வஞ்சித்த விஷயத்தை அப்போதுதான் தன் அண்ணனிடம் தெரிவிக்கிறாள். ரெகுநாத் சேகரைக்கண்டு பேசியும் பயனில்லை. செல்லம் கற்பவதி என்று தெரிந்து ரெகுநாத் அவமானம் தாங்காது தற்கொலை புரிந்துகொள்கிறார். வீடும் ஜப்தியாகி அண்ணனையும் இழந்த செல்லம் அனாதையாகி தன் அண்ணன் மகன் வினோதன் என்னும் சிறு பையனுடன் ஊரைவிட்டு வெளியேறுகிறாள். வழியில் சேரியிலுள்ள முருகன், வள்ளி என்ற தம்பதிகளால் ஆதரிக்கப்படுகிறாள். புஷ்பா என்னும் பெண் குழந்தையை பெற்று அதை முருகன் வள்ளியிடம் ஒப்புவித்து, வினோதனை மாத்திரம் அழைத்துக்கொண்டு வெளியேறுகிறாள். வழியில் ஒரு பணக்காரக் கிழவரின் பேரக்குழந்தையை ஆதரிக்கும் பொறுப்பு இவளுக்கு ஏற்படுகிறது. ராஜா என்ற அக்குழந்தையையும் தன் அண்ணன் மகன் வினோதனுடன் வளர்த்து வருகிறாள் செல்லம். இதன் மத்தியில் சேகர் சித்ராவை மணந்து கமலா என்னும் பெண் குழந்தைக்கு தந்தையாகிறான். வினோதன், ராஜா இருவரும் முறையே டாக்டர், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆகிறார்கள். சேரியில் வளரும் புஷ்பா ஒரு நர்சாகிறாள். சேகர் மகள் கமலாவும் ஒரு யுவதியாக விளங்குகிறாள்.

உத்தமி செல்லத்திற்கு சந்தர்ப்பங்கள் எப்படி சேகரைப் பழிவாங்க உதவுகிறது என்பதும், கமலா, புஷ்பா, ராஜா, வினோதன் இவர்கள் வாழ்க்கை எப்படி முடிகிறது என்பதையும் வெள்ளித்திரையில் கண்டு களியுங்கள்.

சுபம்!

★ பாடல்கள் ★

---

1. ### சங்கப்பாட்டு

இயற்றியவர் :
தஞ்சை ராமையாதாஸ்

பாடியவர்கள் :
T. M. சௌந்தரராஜன்,
S. C. கிருஷ்ணன்,
V. T. ராஜகோபால்.

பரம்பரை பணக்காரன் போலவே
பழகணும் உலகத்திலே
பாவலா போட்டு பணம் சேர்க்கணும்
கழகத்திலே—நம்ப கழகத்திலே (இப்போ)

பல்லவி

பைஸாவும் நாஸ்திதான்
பாக்கெட்டும் காலிதான்
ஜல்ஸாவா பேசி என்ன
டம்பாச்சாரி கோஷ்டி தான்
நைஸாக ப்ராடு பண்ணனும்
அண்ணே — அண்ணே — அண்ணே
எதிரியை எந்நாளும் முட்டாளாய் எண்ணிடாதே
ஏமாற்றினால் கம்பி எண்ணணும்
தம்பி மறந்திடாதே

பல்லவி

புஷ்கோட்டு ஹாட்டிலே
அல்டாப்பு வேட்டிலே
மயங்கவே மாட்டாரப்பா
நம்ப தமிழ் நாட்டிலே
ப்ராடெல்லாம் செல்லாதிங்கே
தம்பி — தம்பி — தம்பி
அம்மனுக்கபிஷேகம் என்று பணம் சேர்த்திடும்
அடியார்களும் இல்லையா
அசந்தவன் தலையிலே மிளகாயை அறைத்து
ஆளானவருமில்லையா
சகஜமாய் பேசியே போர்ஜரி செய்திடும்
டகல்பாஜிகள் இல்லையா
தாடி சந்நியாசி போல் பகல் வேஷமே போட்டு
ஜாலியாய் வாழவில்லையா

வசனம்: அப்படியெல்லாம் இருக்கு உலகம்
நம்ம கழகத்திலே என்னடான்னு (பைஸாவும்)
பெரியவர் செய்திடும் தவறையே உலகத்தில்
விதியென்று சொல்வாரடா—நம்மைப்போல்
அப்பாவிகள் செய்யும் தவறையே
திமிரென்று சொல்வாரடா
அரசியல் சட்டத்தை மீறினாலும்
ஆண்டவன் சட்டத்தை மீறவே முடியாதடா—இதை
அறியாமல் — பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்
அட்மிஷன் ஆகாதேடா (புஷ்கோட்டும்)

2. **சித்ரா தனிப்பாட்டு**

இயற்றியவர்: **ஏ. மருதகாசி** பாடியவர்: **M. L. வசந்தகுமாரி**

கலையே புவியாரைக் கவரும் வலையே
கரை காணாக்கடலே இசைக் (கலையே)

கவலையகற்றும் மருந்தே—செவிக்கு
அமுதாகும் நல் விருந்தே—காதலில்
கரும்பின் சுவையில் கனியதனில்
காணா இனிமை தந்தே
கல்லும் கனிந்துருக சொல்லும் இசையும் கலந்திடும் (கலையே)

பொல்லாத சினமுள்ள விஷநாகமும்—கணப்
போதில் மயங்கியே ஆடும்—பொருள்
இல்லாதவனும் அறிவில்லா மூடனும்
எல்லோரும் மனதாற நாடும்... (கலையே)

உறங்கிடும் எளிதாக மதலையுமே
உயிரான அன்னையின் தாலாட்டில்
புறங்காட்டிப் பகையோட சமராடும் திறமே
போர்ப்பறை ஓசைதரும் புதுவீரமே நிறைந்த (கலையே)

3. **விமலா டான்ஸ் பாட்டு**

இயற்றியவர்: **ஏ. மருதகாசி.** பாடியவர்: **A. P. கோமளா.**

கண்கள் ரெண்டும் பேசுதே
கையுந் தாளம் போடுதே
காதல் கொண்டாடுதே
பாடுதே—வாய் பாடுதே (கண்)

விண்மேலே மின்னும் மின்னல்
மண்மேலே மின்னும் கன்னி
பெண்ணாக வந்த எந்தன் காக்ஷியே—
கண் காக்ஷியே கண்டு

எண்ணாத தெண்ணி எண்ணி
ஏதேதோ ஜாடை பண்ணி
தன்னாலே ஆடுகின்றார் ஆட்டமே
திண்டாட்டமே—அவர்

கண்கள் ரெண்டும் பேசுதே
இவர் கையும் தாளம் போடுதே (கண்)
கடிகாரம் கட்டிக்கொண்டு
கண்ணாடி போட்ட பிரண்டு
துடியாக சும்மா சும்மா துடிக்கிறார்
ஐயா துடிக்கிறார்—அந்த

தடிப்பான ஆளொருத்தர்
படிப்பாளி போலிருக்கு
பொடிப் போடத்தான் மறந்து பிடிக்கிறார்
வாசம் பிடிக்கிறார்—இவர்

கண்கள் ரெண்டும் பேசுதே
அவர் கையும் தாளம் போடுதே... (கண்)
நாற்காலி தன்னை தட்டும்
நாகரீக கிராப்புக்காரர்
மூக்காலே புகையை விட்டு பொசுக்குரார்
சிகரெட் பொசுக்குரார்—அங்கே

ராக்கால ராஜாபோலே
ஜோக்காக வேறொருத்தர்
பாக்காமல் பாத்து என்னை ரசிக்கிரார்
தானே ரசிக்கிரார்—அவர்

கண்கள் ரெண்டும் பேசுதே
அவர் கையும் தாளம் போடுதே (கண்)

4. செல்லம் சோகப்பாட்டு

இயற்றியவர்: ஏ. மருதகாசி. பாடியவர்: ஜிக்கி.

தவறே
புரிந்த பின்னாலே
வருந்திப் பயனேது?

அருந்து முன்னே அமுதா விஷமா என
ஆராய்ந்து பாராது
தவறே
புரிந்த பின்னாலே
வருந்திப் பயனேது

பின்னணி

உண்மை அன்பெனும் பணிவு இல்லாது
உணர்ச்சியின் அடிமையாவதும்
இன்னல் தரும் புவிமீது (தவறே)
கண்ணில் கண்டதும் காதல் என்பது
கானலைப்போலவே மறைவது
மண்ணிலே அந்த மாயையிலே மதி
மயங்கிடில் விளையும் தீமையே
எண்ணம் கலந்தவர் இருவர் இணைந்திடில்
என்றும் இங்கே பிரிவேது
தவறே
புரிந்த பின்னாலே
வருந்திப் பயனேது (தவறே)

5.

கமலா—புஷ்பா டூயட்.

இயற்றியவர்: **ஏ. மருதகாசி.** பாடியவர்: **லீலா—ஜிக்கி.**

கமலா : புதுயுகம் புதுயுகம் புதுயுகம்
எந்நாளும் பெண்களை
இந்நாட்டில் கண்களாய்
எல்லோரும் போற்றி வாழும் இந்த யுகம் (புது)

புஷ்பா : கண்மூடிக் கொள்கையெல்லாம்
மண்மூடிப்போகும்
கலைஞான செல்வம் நன்றாய்
பூமியில் ஓங்கும்
கண்டானேரென்றே சொல்லும்
மதவாதம் நீங்கும்
சமமாக ஆணும் பெண்ணும்
சுகமாய் வாழும் (புது)

கமலா : உல்லாசமாகக் காரை
ஓட்டியே செல்வோம்

இல்லாத பேரைக்கண்டால்
இறக்கமே கொள்வோம்

கல்லூரி பட்டம் பெற்று
கலைமேதை யாவோம்
கல்யாணம் ஆகும் முன்னே
காதல் கொள்வோம். (புது)

6. சேரி நடனப்பாட்டு

இயற்றியவர்: கா. மு. ஷெரீப். பாடியவர்: ஜிக்கி, கானஸரஸ்வதி.
கோமளா, ரத்னமாலா.

ஜாதியிலே நாங்க தாழ்ந்தவங்க
ரொம்ப தாழ்ந்தவங்க ஆனா
நாங்கதான் இல்லேன்னா
எந்த வேலதான் ஆகுமுங்க (ஜாதி)

நித்த நித்தம் மத்தவங்க
சுத்தமாய் வாழ்ந்திருக்க
நாங்கவேணும் இல்லையின்னா
ஊருகெட்டு போகுங்க

தாழ்ந்தவங்க உயர்ந்தவங்க இல்லே
நம்ம நாட்டிலே
ஜாதிரெண்டே என்று சொன்னா
ஔவையும் தன் பாட்டிலே
ஆனாலுந்தா பெரியவங்க மனசு மட்டும் மாறலே

அஞ்சி அஞ்சி நெஞ்சொடிய
பஞ்சையாகி பாடு பட்டோம்
ஆன பலன் ஒன்றுமில்லே
காலம் என்று மாறுமோ?

ஓய்ந்திருக்ககூடாதுங்க யாரும் சும்மா வீட்டிலே
உழைப்பவனே உயர்ஜாதி இனி நம்நாட்டிலே
ஓராயிரம் தடவையிதை சொல்லி சொல்லி ஆடுவோம் (ஜாதி)

7. நர்ஸ் பாட்டு

இயற்றியவர்: ஏ. மருதகாசி. பாடியவர்: T. S. பகவதி.

நைஸான ட்யூட்டி—வெகு
நைஸான ட்யூட்டி

செல்லாது உங்கள் ஜம்பமே வீண் வம்பாகுமா?

டாக்டர்: பெரும்பழி கூறும் பெண் பாவாய் இதாகுமா?
பேதமெனும் இல்லா டாக்டர் நானம்மா
பெண் பிள்ளைக்கையைத் தொட்டாலே பிசகு
ஏதம்மா?

புஷ்பா : கரும்பாய் பேசும் என் கைகார டாக்டரே
கண்டு கொண்டேனையா உமது நோக்கமே
குறும்பான எண்ணம் தகாது ஐயா ஆப்தரே

டாக்டர்: காந்தம் இரும்பைக் கவரும் தன்மை போலவே
கவறுது எனையுந்தன் இளமைக்கோலமே
கணமேனும் வீணுகலாமோ இனியும் காலமே.

10. கமலா பாட்டு

இயற்றியவர்: ஏ. மருதகாசி. பாடியவர்: லீலா

வாழ்வினிலே இன்ப சௌபாக்யமே
நான் பெறுவேன் ஸ்லாக்யமே (வாழ்)

சிந்தைதனில் நிறைந்து
எந்தன் மனம் கவர்ந்த
சுந்தரனின் புதிய சொந்தத்திஞல்
எந்தநாளும் இனிமேல் (வாழ்)

சீலம், ஞானம், தொழில் செல்வம் தனில்
சிறந்தவர் மேல் நானும் காதல் கொண்டேன்
சிந்து பாடி வருவார்
தென்றல் பார்வை தருவார்
ஒரு நாளும் பிரியாது உண்மையான அன்பால்
உள்ளம் கலந்து — சுக
வெள்ளம் தனில் மிதந்து
கள்ள மிலாக் காதல் செல்வத்தையே
கண்டு என்றும் மகிழ்வேன். (வாழ்)

11. புஷ்பா—சோகப்பாட்டு

இயற்றியவர்: ஏ. மருதகாசி. பாடியவர்: T. S. பகவதி.

பெண்மதியாலே முன்மதியின்றி
பெரும்பிழையே புரிந்தேன்
கண்களை நம்பி கருத்தினை இழந்து
காதல் கொண்டு மகிழ்ந்தேன்
என் நிலை தடுமாறி இன்று வாடுகின்றேன்

விண்மதியென்று மின்மினி தன்னை
எண்ணியே தான் வாழ்ந்தேன்
வெளுத்ததை யெல்லாம் பாலென நம்பி
வீணிலே ஏமாந்தேன்
வேஷமே கண்டு ஆசையும் கொண்டு
வேதனையால் நொந்தேன்

பொன் பொருள் தனில் மயங்கிடும்—உலகம்
அன்பையும் மதியாதோ?
கண்கவர் பகட்டை விரும்பிடும் உலகம்
காதலைக்கருதாதோ?
இன்புறப்பேசி பெண்களை ஏய்க்கும்
இழிநிலை மாறாதோ.

சுபம்!

சந்திரசேகரன் அச்சகம், 3, பெருமாள் முதலி ரோட், சென்னை-14

ரொம்ப ப்யூட்டி
தயைகாட்டி
பிணி யோட்டி
சுக மூட்டி—வரும்
நர்ஸ் ட்யூட்டி... (நைஸான)

நலமில்லாட்டி நாக்கை நீட்டு
நாடியைக்காட்டு—இது
நாளான வியாதியாச்சே என்னையாலேட்டு? — என
நயமாகக்கேட்டு நிதம் நான் செய்யும் ட்யூட்டி (நைஸான)

ஆப்பரேஷன் செய்தால்—நான்
அருகிலிருக்கணும்—நினைக்கும்
ஆயுதத்தை ரெடியா—நான்
எடுத்துக் கொடுக்கணும்—பிறகு
சோப்புப் போட்டு கழுவி—அதை
சுத்தப்படுத்தணும்

வசன நடை

துடைச்சு வைக்கணும்
துடியா நிக்கணும்
சொன்னதெக் கேக்கணும்
ட்யூட்டியைப் பாக்கணும்

தினம்—சிரிச்சுப்பேசி பேஷண்டுக்கு
டிரஸ்ஸு மாத்தணும்
தெர்மாமீட்டர் வச்சு ஜுரமிருக்கா
என்று பார்க்கணும்
வெகு சீக்கிரமாய் குணமாக்கி
வீட்டுக்கே அனுப்பணும் (நைஸான)

காச்சல்காரர் வாயில் மிக்சர்
கலந்து ஊத்தணும்—சள்ளைக்
கடுப்புக்காரர் கையில்—ஒரு
ஊசி எத்தனும் உன்னைப்போல்
பைத்தியங்கள் வந்தா-ரெண்டு
போட்டு அடக்கணும்

வசன நடை

பிரியம் காட்டணும்
பெருமை தேடணும்
உறக்கம் நீக்கணும்
உயிரைக் காக்கணும்

பெரும் பணக்காரர் ஏழையென்ற பேதம் கூடாது
குஷ்டம்—பிடித்தவர்கள் வந்தால் முகம் சுளிக்கக்கூடாது
பிணி தீர்ப்பதெங்கள் கடமை
இதில் தவறே கூடாது.

8. விநோதன்—கமலா டூயட்

இயற்றியவர்: ஏ. மருதகாசி. பாடியவர்: லீலா, கண்டசாலா.

ஆண் : காதல் கொண்டு பூவில் வண்டு—தாவுது கண்ணே
பெண் : காதல் அல்ல தேனையுண்ண தாவுது கண்ணு
ஆண் : மனம்போல பருகி வண்டு மகிழ்ந்திடத்தானே
மலர்மேவும் நறுந்தேனைத் தந்தானே பகவானும்
கண்ணே
பெண் : மாறு அன்பே இருந்தால்
வேறு பூவை நாடுமோ
மயக்கிடும் வண்டில் சுயநலம் காதலும் ஆமோ?
ஆண் : ஆஹா வெகு அருமை உன் அறிவே என
தன்பே அங்கேபார் ஒரு ஜோடிப்புறு ஆடும் அழகதுவே
பெண் : அன்பினிலே இணைந்ததனாலே அவை ஆடிடுதே
அஞ்சாமல் ரகசியம் பேசிடுதே
ஆண் : நாமும் அது போலே இனிதாக வாழலாமே
பெண் : அந் நாளும் வரும் விரைவிலே
ஏனோ அவசரமே?

9. புஷ்பா—டாக்டர் டூயட்

இயற்றியவர்: ஏ. மருதகாசி. பாடியவர்: ஜிக்கி, கண்டசாலா.

புஷ்பா : கல்யாணம் ஆகுமுன்னே
கையைத் தொடலாகுமா?
வையம் இதை ஏற்குமா?
காதல் கொண்டாலே எதுவும் ஞாயமா? (கல்)
டாக்டர்: துள்ளாமல் துள்ளும் பெண்ணே?
துஷ்டத்தனம் ஏனம்மா?
தொட்டால் ஒட்டிக் கொள்ளுமா?
தொடுவதனாலே தவறு ஏதம்மா?
புஷ்பா : சிரித்துப்பேசி நீர் சிங்கார மாகவே
விரிக்கும் வலை தன்னில் விழுவேனென்றெண்ணமா?

பாடல்கள்	... ...	ராமய்யதாஸ், ஷெரீப், மருதகாசி
ஒளிப்பதிவு	... ...	M. R. புருஷோத்தம்
ஒலிப்பதிவு	... ...	R. G. பிள்ளை, K. விஸ்வநாத்
ஆர்ட் டைரக்டர்	... ...	R. B. சுப்ரமணியன்
லாபரட்டரி	... ...	விஜயா லாபரட்டரி.
எடிட்டிங்	...	T. R. கோபு, G. கல்யாண சுந்தரம்
மேக்-அப்	... ...	K. A. நடராஜ்
உடையலங்காரம்	... ...	S. நடராஜ்
உதவி	... ...	N. ராமன் T. பாலன்
புரொடக்ஷன்	... ...	V. பாலகுமார் V. சங்கர் B. A.
டைரக்ஷன் உதவியாளர்கள்	...	C. கிருஷ்ணன், S. R. வெங்கடேஸ்வரன்
ஆர்ச்செஸ்ட்ரா :	... ...	G. ராமநாதன் & பார்ட்டி
நடன அமைப்பு	... ...	சோப்ரா, மாதவன்

பின்னணி பாடகர்கள் :

வசந்தகுமாரி, ஜிக்கி, லீலா, பகவதி, கோமளா, கானசரஸ்வதி,
சௌந்தரராஜன், கிருஷ்ணன், ராஜகோபால்
&
கண்டசாலா.

எமது அடுத்த வெளியீடு !



"நரஸு ஸ்டுடியோஸ்"

"துளிவிஷம்"



விநியோகம்

திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை

மாவூர் காளி பிலிம்ஸ்

தில்லை நகர், திருச்சி

சந்திரசேகரன் அச்சகம், 3, பெருமாள் முதலி ரோட், சென்னை-14.